இப்போது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அதே போல் எண்ணூரில் உள்ள தெற்கு லாக் என்ற பகுதியிலிருந்து யானைகவுனி என்ற பகுதி வரை 128 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அடையார் தெற்கு லாக்கிலிருந்து மாமல்லபுரம் வரை 502 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு எந்த அளவுக்கு இதை ஏற்றுக்கொண்டு நிதி உதவி செய்கிறார்களோ அந்த அளவுக்கு தான் இவற்றைச் செய்ய முடியும். இதிலே 2 பக்கமும் பாதை அமைக்கின்ற அளவுக்கு இட வசதி இருக்குமானால் அதையும் அமைப்பதற்கு—இப்போது சென்னையில் சிலயிடங்களில் அமைத்துக் கொண்டு இருக்கிறோம்—வேண்டிய ஏற்பாட்டை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் படகு போக்குவரத்து முழுமையாக எல்லா இடங்களிலும் ஏற்படுத்த முடியுமா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்று. நாம் நினைப்பது போல் கடல் நீரை அங்கே கொண்டு வந்து, படகுப் போக்கு வரத்து ஏற்படுத்துவதற்கு எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகும் என்ற காரணத்தால் அது சாத்தியமாக இருக்குமா என்பது இன்று ஒரு பெரிய சந்தேகமாக இருக்கிறது. இருந்தாலும் சீரமைப்பதற்கான முயற்சியை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

குற்றாலம் கோவிலைச் சார்ந்த சித்திரசபை ஓவியங்கள் மழை நீரால் பாதிக்கப்படுதல்.

50—(*வினா எண் 6048) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் கோவிலைச் சார்ந்த சித்திரசபை ஓவியங்கள் மழை நீரால் பாதிக்கப்பட்டு சிதைந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே. (அ மற்றும் ஆ) குற்றாலம் அருள்மிகு குற்றாலநாத சுவாமி திருக்கோயிலைச் சார்ந்த சித்திரசபையின் மேற்கூரை

1987 நவம்பர் 11]

செப்பு ஓடுகளால் பதிக்கப்பட்டிருப்பினும் மழை நேரங்களில் ஏற்படும் கசிவுகளால் உட்பிரகாரத்தில் உள்ள சித்திரங்கள் சிறிது பழுதடைந்துள்ளன. சித்திரங்களை மழைநீர் கசிவுகளிலிருந்து தற்காலிகமாகப் பாதுகாக்கும் பொருட்டு, பழுது பார்க்கப்பட்டுள்ளது. மேற்படி சித்திரசபை சித்திரங்களை நிரந்தரமாகப் பாதுகாக்க செப்பேடு மேற்கூரையைப் பிரித்து மீண்டும் செப்பேடுகளைப் பதித்து இணைந்து "நெயில் பிரசிங்" செய்ய வேண்டும். இப்பணியினை சாதாரண தொழிலாளர்களைக் கொண்டு செய்ய இயலாது. ஆகையால் தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்த திறமையான வல்லுநர்களாலும், ஸ்தபதிகளாலும் தான் இயலுமென்பதால், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு மேற்படி பணியினை செய்து முடிக்க கடிதம் எழுதப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய ஊருக்கு அருகில் உள்ள சிதம்பரம் கனகசபை, திருவாலங்காடு ரத்தின சபை, மதுரை வெள்ளி சபை, திருநெல்வேலி தாமிர சபைக்கு அடுத்தபடியாக அருள்மிகு நடராசருக்கு சிறப்பு சேர்க்கின்ற மிகப் பெரிய ஆலயமாக குற்றாலத்திலே அந்த சித்திரை சபை இருக்கிறது. அஜந்தா, எல்லோரா போன்று இதைச் சீரமைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றாலத்திற்கு வந்தபோது நான் நேரில் அழைத்துச் சென்று காண்பித்தேன். இயற்கையால் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், அங்கே வந்து பார்க்கின்றவர்கள் கண்களுக்கு அந்தச் சித்திரங்களின் கண்களை தோண்ட வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறது. அத்தகைய துர்ப்பாக்கியமான சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆகவே அந்தச் சித்திரங்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவண்ணம், அவற்றுக்கு முன்னால் ஒரு கண்ணாடித் தடுப்பு போட்டு, அந்தச் சித்திரங்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா? அந்த முறையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நான் அந்தச் சித்திரங்களைப் பார்த்தேன். அந்தச் சித்திரங்

களுக்குப் பழுது ஏற்பட்டிருப்பது என்பது உண்மைதான். தற்காலிகமாகப் பாதுகாக்க கண்ணாடி அல்லது வேறு பொருட்களை உபயோகப்படுத்தி, மூடுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளருக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சித்திரச் சபையிலுள்ள, மிகப் பிரபலமான தஞ்சாவூர் ஆர்ட் என்று சொல்லப்படுகின்ற வரிசையிலே வருகின்ற அந்தச் சிறப்பான சித்திரங்களை அமைச்சர் அவர்கள் சொன்னது போல் நேரிலே பார்த்து வியந்தார்கள். பல வெளிநாட்டவர்களும், இந்தியத் தலைவர்களும் வந்தபோது அவர்களை நேரிலே அழைத்துச் சென்றிருக்கிறேன். அவர்களும் அதை ஆவலுடன் பார்த்துப் பாராட்டியிருக்கிறார்கள். சித்திர சபைக்குப் போதுமான விளம்பரம் இல்லை . கலைப் பொக்கிஷங்கள் உலகிற்குத் தெரியாமல் இருக்கின்றன. இந்து சமய அறநிலையத் துறையும் சுற்றுலாத் துறையுமாகிய இரண்டு துறைகளும் மாண்புமிகு அமைச்சரவர்களின் கீழ் இருப்பதால், இந்தச் சித்திர சபைக்கு முக்கியத்துவம் கொடுத்து, வெளி உலகிற்குத் தெரிவிக்கின்ற வகையிலே அதை வெளிக் கொணர ஆவன செய்வார்களா? அந்தச் சித்திரச் சபையில் விளக்குகள் சரியாக இல்லை. சரியான முறையில் அந்த விளக்குகளைப் போட்டு, அந்தச் சித்திரங்கள் பார்ப்பவர்களுக்கு எடுப்பாகத் தெரியும் வகையில் வசதி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையிடம் சொல்லி, குற்றாலத்திற்கு வருகின்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், பெயர்ப் பலகைகள் மற்றும் 'ப்ரோச்சர்ஸ்' வெளியிடும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

நிலத்தின் விலை உயர்வுக்கு ஏற்ப விலைமதிப்பு நிர்ணயம் செய்யும் வழிகாட்டிக் கோட்பாடுகளை மாற்றுதல்.

51—(*வினா எண் 6811) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலத்தின் விலை உயர்வுக்கு ஏற்ப விலை மதிப்பு நிர்ணயம் செய்யும் வழிகாட்டிக் கோட்பாடுகளை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?